


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஜகத்குரு சங்கராச்சார்யர் ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரை



நம்முடைய வாழ்க்கையிலே நமது மனதை ஒரு விஷயத்தில் நிறுத்துவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எத்தனையோ பேர் என்னிடம் வந்து, “ஜபத்தில் உட்கார்ந்தால் மனது எங்கெல்லாமோ போய்க்கொண்டிருக்கிறது; பூஜைக்கு உட்கார்ந்தால் எங்கெல்லாமோ மனம் அலைபாய்கிறது. மீதி சமயத்திலாவது மனம் ஓரிடத்தில் நிற்கிறது. ஜபத்திற்கோ, பூஜைக்கோ உட்கார்ந்தால் மட்டும் மனம் நிற்கவேமாட்டேன் என்கிறதே! ஏன்?” என்று சொல்வார்கள். எத்தனையோ ஜென்மங்களாக நமக்கு இப்படிப்பட்ட பிராரப்தம் வந்திருக்கிறது. மனதை ஓரிடத்தில் நிறுத்த முடிவதில்லை. பகவான் கிருஷ்ணபரமாத்மாவின் சன்னிதியில் அர்ஜுனனே இந்தப் பிரச்சினையைப் பற்றி, “பகவானே நீங்கள் எல்லாம் சொல்கிறீர்கள், ஆனால் மனதை நிறுத்துவது ரொம்ப கஷ்டமே, காற்றைப் பிடித்து நிறுத்துவது எப்படியோ அப்படி இருக்கிறதே இந்த மனதின் ஸமாச்சாரம்” என்று கேட்டான். இதற்கு பகவான், “நீ கேட்டது சரி, மனதை நிறுத்துவது என்பது மிகவும் கஷ்டம் என்று சொன்னாய். அதை ஒப்புக்கொள்கிறேன். நிறுத்த முடியாது என்று நீ சொல்வதானால் அதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். கஷ்டம் என்று சொன்னாய். அது வாஸ்தவம். ஆனால் அப்பியாசம் செய்து வந்தால் மனதை நிறுத்த முடியும்; என்று பதில் கூறினார். ஆகையால், “மனம் எப்பொழுதும் ஓடிக் கொண்டே இருக்கிறதே! அது ஓரிடத்தில் நின்றால்தானே பக்தி என்பதை வைத்துக்கொள்ள முடியும்?” என்று கேட்டால், அதற்கும் அந்த பகவானிடத்தில்தான் நாம் போக வேண்டும்.

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸந்தேகம் தெளிதல்

**(பூஜ்யஸ்ரீ ஸ்வாமீ ஓம்காரானந்தர்)**

**கேள்வி : ஆடும் நடராஜர் சிலை. குழலூதும் கண்ணன் ஆகிய தெய்வச்சிலைகளை வீட்டில் வைப்பது நல்லதல்ல என்ற கருத்து சரியானதா?**




**ஸ்வாமிஜீ :** சரியானதல்ல என்பது மட்டுமல்ல; தவறானது, அதர்மம் என்றும் கூறலாம். இதுபோன்ற ஸாஸ்த்ர ஸம்மதமற்ற பல விஷயங்கள் ஆன்மிக உலகில் இருப்பது வருத்தமளிக்கிறது. நடராஜர் சிலை இருக்கும் இல்லத்தில் ஆநந்தம் தாண்டவமாடும். குழலூதும் க்ருஷ்ணர் வீற்றிருக்குமிடத்தில் ஆநந்தம் கீதமிசைக்கும். தண்டபாணி குடி கொண்ட வீட்டில் துன்பமில்லா பேரின்ப வாழ்வு அமையும். பகவத்கீதை உபதேஸப் படமிருக்கும் மனையில் ஊக்கமும், உற்சாகமும், சுறுசுறுப்பும், அஷ்டலக்ஷ்மிகளின் பரிபூர்ண நிலைத்திருக்கும். இது உறுதி.

**கேள்வி : ப்ரதோஷ காலத்தில் சிவனை வழிபடுவதன் காரணம் என்ன?**

**ஸ்வாமிஜீ :** ப்ரதோஷ வேளையில் சிவ பெருமான் நந்தி தேவரின் இரு கொம்புகளுக்கு இடையில் தாண்டவமாடுவதாக ஐதிஹ்யம். இதன் பொருள் "இருமைகளுக்கிடையில் இறைவனைக் காண்" என்பதேயாகும். இளமை-முதுமை, வெற்றி-தோல்வி, இன்பம்-துன்பம், புகழ்-இகழ் போன்ற இருமை அநுபவங்களில் தாக்குண்டு வரும் உயிர்கள், இருமைகளைக் கடந்த இறைவனைச் சார்ந்திருந்து வழிபட்டு மேன்மை அடைய வேண்டும் என்பதே ப்ரதோஷ கால வழிபாட்டின் உண்மை நோக்கமும் பயனுமாகும்.


(தொடரும்) நன்றி : வேதநெறி, வெப்: https://www.vedaneri.org/



Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# அன்றாட வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய தர்மங்கள்.


7. பஹிஷ்டை என்பது ப்ரும்மஹத்தி வ்ரதம். அந்த மூன்று நாட்களிலும் அவர்கள் அருகே நாம் போகக் கூடாது. பேசவும் கூடாது. நாம் உண்ணும் போது அவர்கள் குரல் கேட்கக்கூடாது. அவர் உண்ட மிகுதி ஜலம், அன்னம் இவைகளை உட்கொள்ளக் கூடாது. நான்காவது நாள் அவர் ஸ்நானம் செய்தாலும் நெருப்பினிடம் சென்று பாகம்செய்தால் அவளுக்கு நோய் உண்டாகும். அதைப் புஜிப்பவனும் அசுத்தனாவான். ஐந்தாவது நாளே சுத்தி.

8. பசுவினிடம் ஸகல தேவர்களும் இருக்கின்றனர். அதை வலம் வருவது, சொறிவது, புல், தவிடு, ஜலம், புண்ணாக்கு அளிப்பது புண்ணியம். ஸந்தானம் உண்டாக்கும். அதைக் காலால் உதைப்பது, தடியால் அடிப்பது, அதற்கு உணவு அளிக்காமல் நாம் உண்பது, பிறர்நிலத்தில் மேயும்போது சொந்தக்காரரிடம் சொல்வது முதலியவை பாபமாகும். அதனால் சண்டாளப் பிறவி உண்டாகும். கைசிகன் என்ற சண்டாளன் முன் பிறவியில் உயர்ந்த ஸன்யாஸி. பசுவின் கால் தூளிபட்டதென பிக்ஷான்னத்தை உண்ணாமல் தூரே எரிந்தார். அந்த பாபத்தால் அவர் சண்டாளரானார். கோபூஜையினால் திலீப மஹாராஜனுக்கு ரகு எனும் ஸத்புத்ரன் ஜனித்தான். முடிந்தவரை கோ ரக்ஷணம் செய்யவேண்டும். ஹிம்ஸிக்காமலாவது இருக்கவேண்டும்.

9. பிறர் தரித்த வஸ்த்ரம், பாதரக்ஷை, மாலை, தீர்த்தபாத்ரம், ஆஸனம், படுக்கை முதலியவைகளை உபயோகிக்கலாகாது. அவை பாபத்துடன் நோயையும் உண்டுபண்ணும்.


10. பிணப்புகை, இளம் வெய்யில், தீபநிழல், மனிதர் நிழல், சண்டாளர் நிழல் நம்மேல் படக்கூடாது. அவை நம் செல்வத்தையும் ஆரோக்யத்தையும் ஆயுளையும் குறைக்கும்.

(தொடரும்....)



Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita




## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# தர்ம சாஸ்திரம் என்றால் என்ன ? அவை எப்பொழுது யாரால் எழுதப்பட்டது ?

**(ப்ரஹ்மஶ்ரீ ராமேஸ்வர அவதானிகளின் ப்ரசிஷ்யர் ப்ரஹ்மஶ்ரீ ராஜீவாக்ஷ கனபாடிகள்)**

வேதோகிலோ தர்ம மூலம் எல்லா தர்மங்களுக்கும் வேதம்தான் வேர் என்று மனு ஸ்மிருதியில் கூறப்பட்டுள்ளது. தர்மம் என்பது வேதத்தால் சொல்லப்பட்டதும், நற்பயனை கொடுக்கக் கூடியதும் ஆகும்.

தர்மங்களை தொகுத்து செய்முறைகளை கட்டளையிடும் நூல்களுக்கு தர்மசாஸ்திரம் எனப் பெயர். வேதம் நான்கு வகைப்படும் - ரிக் வேதம், யஜுர் வேதம், சாம வேதம் மற்றும் அதர்வண வேதம். அதில் ரிக் வேதம் 21 சாகைகளை கொண்டது, யஜுர் வேதம் 101 சாகைகளை கொண்டது, சாம வேதம் 1000 சாகைகளை கொண்டது, அதர்வண வேதம் 16 சாகைகளை கொண்டது ஆக மொத்தம் 1138 வேத சாகைகள். இந்த 1138 வேத சாகைகளிலும் தர்மங்களே உபதேசம் செய்யப்படுகின்றன.

மகரிஷிகள் எல்லா வேதசாக்கைகளையும் கற்று அறிந்தவர்கள். இந்த கலியுகத்தில் மனித ஆயுள் குறைவாக இருப்பதால் எல்லா வேதசாகைகளையும் கற்று அறிய சாத்தியமில்லை. ஆகவே மகரிஷிகள் தீர்க்கதரிசிகளாக இருப்பதால் வருங்கால தலைமுறைக்கு எல்லா வேதங்களுடைய சாரமாகவும் சுலபமாக தர்மங்களை தெரிந்து கொள்வதற்காகவும் கடை பிடிப்பதற்காகவும் தர்ம சாஸ்திர நூல்களை எழுதி அனுக்கிரஹம் செய்து உள்ளார்கள். அவைகளுள் 18 ஸ்மிருதிகள் பிரசித்தமானவைகள்.

1) மனு ஸ்ம்ருதி
2) யாஞ்யவல்க்ய ஸ்ம்ருதி
3) பிரகஸ்பதி ஸ்ம்ருதி
4) வசிஷ்ட ஸ்ம்ருதி
5) பராசர ஸ்ம்ருதி
6) வியாச ஸ்ம்ருதி
7) தக்ஷ ஸ்ம்ருதி
8) விஷ்ணு ஸ்மிருதி என்கின்ற (மனு ஸ்மிருதி)
9) நாரத ஸ்ம்ருதி
10) போதாயண ஸ்ம்ருதி
11) ஆபஸ்தம்ப ஸ்ம்ருதி
12) ஆஸ்வலாயண ஸ்ம்ருதி
13) உபமன்யு ஸ்ம்ருதி

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)


14) கௌதம ஸ்ம்ருதி
15) லோகாக்ஷி ஸ்ம்ருதி
16) வாதூல ஸ்ம்ருதி
17) சங்க ஸ்ம்ருதி
18) ஹாரீத ஸ்மிருதி மற்றும் இதுபோன்று உபஸ்ம்ருதிகள் 18 ஸ்மிருதிகள் இருக்கின்றன.

மனு முதலியவர்கள் அனைத்து வேத சாகைகளிலும் உள்ள தர்மங்களை அறிந்து தானும் அனுஷ்டித்து அதன் பலனை அடைந்து வருங்கால நம் சந்ததியர்களுக்கும் இந்த தர்மங்களின் பலன்கள் கிடைக்க வேண்டும் என்று ஸ்மிருதி வடிவத்தில் நூல்களாக அமைத்துள்ளார்கள். இந்த தர்ம சாஸ்திரங்களை படித்து புரிந்துகொண்டு அனுஷ்டானம் செய்வதற்கு நமக்கு சிரமமாக இருக்கும் என்று கருதி அதையும் சுலபப்படுத்துவதற்கு பல நிபந்தன கிரந்தங்கள் உருவாக்கப்பட்டன. அவைகளுள்


1) ஹேமாத்ரீ
2) ஸ்மிருதி சந்திரிகா
3) ஸ்மிருதி சந்தர்பம்
4) ஸ்மிருதி ரத்தினம்
5) தர்ம சிந்து
6) நிர்ணய சிந்து
7) பரிமள பாரிஜாதம்
8) த்ரிகாண்ட மண்டனம்
9) ச்ராத்த மயூகம்
10) ஸ்மிருதி முக்தா பலம்
11) அக பஞ்ச சஷ்டி
12) தர்ம சாரம்
13) தர்ம சாகரம்

முதலிய பல கிரந்தங்கள் நித்தியானிகம் முதல் ச்ராத்தாதிகள் வரையிலும் ஒவ்வொரு ஒரு ப்ரகரணமாக எடுத்துக்கொண்டு அதற்கு அனுகூலமாக ஸ்மிருதி வாக்கியங்களை மேற்கோள் காட்டி நாம் சுலபமாக புரிந்து கொண்டு அனுஷ்டானம் செய்யும் வகையில் வர்ணாசிரம பேதங்களை அனுசரித்து இந்த நிபந்தன கிரந்தங்களை நம் முன்னோர்கள் தர்ம சாஸ்திர பண்டிதர்கள் உருவாக்கி கொடுத்து உள்ளார்கள்.

.....வளரும்


Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# குறியும் நெறியும்

(ஸ்வாமீ பூர்ணானந்தர்)

வாழ்க்கை என்பது என்ன?

வாழ்வைப்பற்றி அவரவர் கொண்டிருக்கும் கருத்துக்களே அவரவர் வாழ்க்கையாக அமைகிறது. வாழ்க்கையைப் பற்றிய நமது கருத்து என்ன? நமது கருத்து வாழ்வைப் நம்மால் பற்றிய நமது எண்ணம் அறிவுபூர்வமாக ஆராய்ந்து எடுக்கப்பட்ட முடிவா? அல்லது அறிவில் சிறந்த நம் முன்னோர்கள் காட்டிய வழிப்படி உருவானதா? அல்லது பெற்றோர்களாலும் ஸமூஹத்தாலும் நம்மீது திணிக்கப்பட்டதா?

அல்லது மனம் போனபடி அவ்வப்போது நாம் எடுக்கும் முடிவுகளின் அடிப்படையில் உள்ளதா? வாழ்க்கை சாபமா. வரமா?

உங்களின் இப்போதைய நீங்களே சுயபரிசோதனை கொள்ளுங்கள். நமக்குக் கிடைத்திருக்கும் வாழ்க்கை ghசாபமா, வரமா? கையில்தான் உள்ளது. என்பது நமது வாழ்வை

நாம் செல்வந்தராயிருக்கலாம். மிக ஏழையாக இருக்கலாம். அல்லது நடுத்தர வகுப்பினராயிருக்கலாம். எப்படி இருந்தாலும் நமக்கு மகிழ்வை மனநிறைவைக் கொடுப்பது வசதிகளல்ல நமது எண்ணங்களே. அறிவு நிலையே. மனப்பக்குவமே நமது வாழ்வை வடிவமைக்கின்றன.

நமது மனபரிபாகத்துக்கு ஏற்றாற்போலவே நம் வாழ்க்கை அமைகிறது. மனச்சிறகு கொண்டு ஒருவன் வாழ்வின் உயர்ந்த சிகரங்களையும் எட்டலாம், மிகத்தாழ்ந்த பள்ளத்தாக்குகளிலும் சுற்றலாம் மனமே மனிதர்களின் கட்டுக்களுக்கும் விடுதலைக்கும் காரணம் (மன ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்த மோக்ஷயோ:) என்பது அறிஞர்களால் கண்டு சொல்லப்பட்ட உண்மை. எனவே, "நம்முடைய எல்லா இன்ப மனம் துன்பங்களுக்கும் நமது மனமே மனிதனின் காரணம்" என்பதை அறிந்து கொள்வதே ஆன்மிகப் பயணத்தின் துவக்கம்.

(தொடரும்)
நன்றி : வேதநெறி
வெப்: https://www.vedaneri.org/


## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# வேத மந்திரங்களின் சிறப்புகள்

### க்ருஷ்ண யஜுர் வேத தைத்திரீய ஸம்ஹிதை (காண்டம் 1)

### (1.1.2 அனுவாகம் 2)



1. யக்ஞும் பற்றிய பகிரங்க அறிவிப்பினால் நீ தேவதையின் இருக்கை (ஆஸனம்) யாகிறாய். (இங்கு நீ என்பது மந்திரத்தைக் குறிக்கும்.)

2. ராக்ஷஸர்கள் எரிக்கப்பட்டுவிட்டனர். தீய சக்திகள் எரிக்கப்பட்டுவிட்டன.

3. மந்திரங்களால் ஆனதும், ஸ்வதர்மப்படி வடிவமைக்கபட்டதுமான இந்தப் புனிதமான ஆஸனம் யக்ஞும் நடத்தப்பட இருப்பதை அறிந்துவிட்டது. ரிஷிகள் இந்த தர்ப்பையால் ஆன (மந்திரமயமான) ஆஸனத்தைத் தேவர்கள் அமரும் பொருட்டு அன்புடன் முன்னால் வைக்கிறார்கள்.

4. நீ தேவர்களால் தூண்டப்படுகிறாய். அவர்களின் கருணை வெள்ளத்தால் வளர வைக்கப் படுகிறாய்

5. தெய்வீக மந்திரங்களே (புல்லே) உங்களை நான் குறுக்கு வாகிலோ அல்லது நீள வாகிலோ சிதைக்காமலிருப்பேனாக.

6 - 7. பற்பல மந்திரங்கள் இணைக்கப்படும்பொழுது, இணைப்புகளை, சந்திகளை மட்டும் சீராக்குவானாக. அந்த என் செயலினால் எனக்கு எந்தவிதத் தீங்கும் நேராமலிருக்கட்டும்.

8. தெய்வீக மந்திரமே (புல்லே) நூற்றுக்கணக்கான துளிர்களுடன் விரிந்து எழுவாயாக. (ஒவ்வொரு மந்திரமும் நூற்றுக் கணக்கில் விரிகின்றது).

9. நாங்கள் ஆயிரக்கணக்கில் துளிர்விட்டுத் தழைப்போமாக.

10. பூவுலகினுடன் (பௌதீக உடல்) எங்கள் தொடர்பைக் காப்பாயாக.

11. உன்னை அன்புடன் சேகரிக்கிறேன்.

12 - 13. நீயே அதிதிதேவியின் மேகலை/ஒட்டியாணம். தன்னடக்கம் உண்டுபண்ணும் இந்திராணியின் சக்தியும் நீயே. (அளவற்றதின் அடையாளச் சொல்லாக 'அதிதி' என்பது ரிக்வேதத்திலும் தை .ஸ.லும் உபயோகிக்கப்படுகிறது. அளவற்றதை'க் கட்டுவது மந்திரமே என்பது பொருள்)

(தொடரும்….)

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# சில உபநிஷத்துக்களின் சாரம்

## || ப்ரஹ்மோபநிஷத் ||

4. எல்லா தேவதைகளும் இருதயத்தில் இருக்கிறார்கள். பிராணன்கள் இருதயத்தில் நிலைபெறுகின்றன. இருதயத்தில் தான் உயிர்நிலையும் ஞான ஒளியும். அதுதான் முப்புரிப்பூணூல் என்று ஞானிகள் அறிகிறார்கள். பரமாத்மா இருதயத்தில் தெய்வமாகவும் பிராணணாகவும் அறிவாகவும் உறைகிறது.

5. பரிசுத்தியளிக்கக் கூடியவற்றுள் சிறந்ததும், ஆதியில் பிரம்மா தோன்றும்போதே அவருடன் தோன்றியதும், ஆயுளையும் முதன்மையையும் அளிக்கவல்லதுமாகிய வெண்மையான பூணூலை தரிக்கிறேன். ஞானஒளியும் பலமும் அதனால் நிலைபெறவேண்டும்.

(இது யக்ஞோபவீதம் புதிதாகத்தரிக்கும்போது உச்சரிக்க வேண்டிய மந்திரம்.)

6. குடுமியுடன் தலைமயிரை மழித்து வெளிப்பூணூலை ஞானி விலக்கிவிடவேண்டும். எது அழியாத பரப் பிரம்மமோ அதை ஸூத்ர மெனப்பட்ட பூணூலாகத் தரிக்கவேண்டும்.

(நூலில் மணிகள் கோக்கப்பட்டாற்போல் பிரம்மத் திடம் உலகனைத்தும் கோக்கப்பட்டிருப்பதால் பிரம்மம் ஸூத்ராத்மா எனப்படும். 'மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ' என்பது கீதை 7.7)

7. ஸூசனை செய்வதால் அதாவது சுட்டிக் காட்டுவதால் அதை ஸூத்ரம் என்று கூறுகின்றனர். ஸூத்ரம் குறிப்பிடுவது (ஒப்புயர்வற்ற) பரமபதம். அந்த ஸூத்ரம் எவனால் அறியப்பட்டதோ அவனே வேதத்தின் கரை கண்ட பிராம்மணனாவான்.

8.சரட்டில் மணிநிறைகள் போல் இவ்வனைத்தும் எதில் கோக்கப்பட்டுள்ளதோ அந்தச்சரட்டை (ஸூத்திரத்தை) யோகத்தை அறிந்தவனும் உண்மையைக் கண்டவனுமான யோகி தரித்து கொள்ளட்டும்.

9. சிறந்தயோகத்தில் நிலைபெற்ற ஞானியானவன் வெளிப்படையான பூணூலை விட்டுவிடட்டும். பிரம்ம பாவனையாகிற இந்த ஸூத்திரத்தை (நூலை) எவன் தரிக்கிறானோ அவன் தான் அறிவாளி. (தொடரும்....)

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

Our Website link : https://www.voiceofjagadguru.com/

Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :

https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UlI

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com

| Editorial Board | | |
|---|---|---|
| Sri P A Murali | Hon' Advisor | Administrator & CEO, Sri Sringeri Mutt & It's Properties, Sringeri |
| Sri S N Krishnamurthy | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| Sri Tangirala Shiva Kumara Sharma | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| PujyaSri Swami Guruparananda | Hon' Editor | Founder Acharya, Poornalaya & Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Theni. |
| Sri B Vijay Anand | Web Director | Coimbatore |
| Smt B Srimathi Veeramani | Web Asst Director & Chief Editor | Tirunelveli |
| K M Kasiviswanathan | Hon' Editor | Tirunelveli |